**தமிழ்நாடு அரசு**

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை**

**வட்டாட்சியர் அலுவலகம், அரவக்குறிச்சி வட்டம், கரூர் மாவட்டம்.**

அறிவிக்கை எண்.02/2025 — நாள். 10.10.2025

கரூர் மாவட்ட வருவாய் அலகில், அரவக்குறிச்சி வட்டத்தில் காலியாக உள்ள 03 கிராம உதவியாளர் பணியிடத்தை நிரப்பிட இவ்வலுவலக அறிவிக்கை எண்.01/2025, நாள்:25.07.2025-ன் படி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்நேர்வில், தற்போது அதிகபட்ச வயது வரம்பு தளர்வு செய்து தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள இடஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். **(குறிப்பு: இவ்வலுவலக அறிவிக்கை எண்.01/2025, நாள்:25.07.2025-ன் படி ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் தற்போது விண்ணப்பிக்க தேவையில்லை).**

| | |
|---|---|
| **விண்ணப்பங்கள் பெறப்படும் நாள்.** | 13.10.2025 முதல் |
| **விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்.** | 27.10.2025 மாலை 5.45 மணி வரை |
| **பதவியின் பெயர் :** | கிராம உதவியாளர். |
| **சம்பள விகிதம் :** | சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.11,100 - 35,100/- |
| **வட்டத்தின் பெயர்:** | அரவக்குறிச்சி |
| **காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை** | 03 |
| **நிரப்பப்படவுள்ள கிராமத்தின் பெயர் விவரம்.** | 1. வெஞ்சமாங்கூடலூர் கீழ்பாகம்<br>2. கொடையூர்<br>3. சாந்தப்பாடி |

**இனசுழற்சி எண் விவரம்**

| **வ.எண்** | **இன சுழற்சி எண்** | **இனசுழற்சி விவரம்** | **முன்னுரிமை/ முன்னுரிமையற்றவர்** | **பொது ஆண்/பெண்** | **ஆதரவற்ற விதவை/ முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளி** |
|---|---|---|---|---|---|
| 01 | 41 | பொதுப்பிரிவு (GT) | முன்னுரிமையற்றவர் | பொது | -- |
| 02 | 42 | பட்டியலினத்தவர் (SC) | முன்னுரிமையற்றவர் | பொது | -- |
| 03 | 43 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (MBC & DNC) | முன்னுரிமையற்றவர் | பெண் | -- |

| | |
|---|---|
| கல்வித் தகுதி | 1. தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதிவகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC-secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாக கொண்டு தேர்வு எழுதியிருக்க வேண்டும்.<br>குறிப்பு: SSLC மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்பிக்க வேண்டும். (குறைந்தபட்ச கல்வி தகுதி பத்தாம் வகுப்பு தோல்வி).<br>2. தமிழில் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| இதர தகுதிகள் | 1. விண்ணப்பதாரர் அரவக்குறிச்சி வட்டத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.<br>2. தேர்வு செய்யப்படுபவரின் நடத்தை குறித்தும் முந்தைய குற்றப் பின்னணி குறித்தும் நியமன அலுவலர் அறிந்து திருப்தி அடைய வேண்டும்.<br>3. அடிப்படை விதி 10 இன் படி உடற்தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>4. தேர்ந்தெடுக்க கூடிய நபரின் கணவரோ, மனைவியோ உயிரோடிருக்கும் போது வேறொரு திருமணம் செய்திருக்கக் கூடாது. |
| வயது வரம்பு | குறைந்தபட்ச வயது - 21 வயது (அனைத்து பிரிவினருக்கும்)<br>(01.07.2025அன்று 21 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.)<br>அதிகபட்சவயது - 32* வயது - (பொது பிரிவினர்)<br>- 39* வயது - பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்.<br>- 42* பட்டியலினத்தவர் / பழங்குடியினர்/ ஆதரவற்ற விதவை<br>**மாற்றுத் திறனாளிகளுக்கு**<br>அதிகபட்சவரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக தளர்வு வழங்கப்படும்.<br>**முன்னாள் இராணுவத்தினருக்கு**<br>50* வயது - பொதுபிரிவினர்<br>55* வயது - பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியலினத்தவர் / பழங்குடியினர்.<br>(* அரசாணை (நிலை) எண். 91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள். 13.09.2021-ன்படி வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது) |
| விண்ணப்பிக்கும் முறை | கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை கரூர் மாவட்டத்தின் அதிகாரப்பூர்வமான இணையதளமான http://www.karur.nic.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆவணங்களுடன் அரவக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பம் செய்யலாம். காலம் கடந்து வரும் எந்தவொரு விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. |
| குறிப்பு | தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மிதிவண்டி/இருசக்கர வாகனம் ஓட்டும் திறன்/வாசித்தல்/எழுதுதல் திறனறித் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றிற்கு தனித்தனியாக கடிதம் அனுப்பி வைக்கப்படும். |

9/10/25

வட்டாட்சியர்,
அரவக்குறிச்சி.

9/10/25